HATHEE BOOK DEPOT
79, DEMATAGODA ROAD
COLOMBO 9
T. PHONE 697758

Registered as a News Paper in Sri Lanka.

முஸ்லிம் காங்கிரஸ்
مسلم كنكرس
MUSLIM CONGRESS

Carnival ICE CREAM

'அல்லாஹ்வின் வேதமெனும், கயிற்றைப் பலமாகப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள். பிரிந்து விடாதீர்கள்' -அல்குர்ஆன்

விலை ரூபா 3-00.

மலர் 5 ★ ஜமாதுல்-அவ்வல் - ஜமாதுல்-ஆகிர் - ஹிஜ்ரி 1411 ★ டிஸம்பர்-31-1990 ★ இதழ் 12 ★ தொலைபேசி. 431711

# புலிகளின்யுத்தநிறுத்தம்போர்த்தந்திரம்மட்டுமே

# அரசு இன்னுமொருமுறை ஏமாறக்கூடாது!

31-12-90 நள்ளிரவிலிருந்து விடுதலைப்புலிகளின் தலைவர்களில் ஒருவரான கிட்டு லண்டனிலிருந்து ஒருதலைப்பட்சமான ஒரு யுத்த நிறுத்தத்தை பிரகடனப்படுத்தியிருப்பது தெரிந்ததே.

இவ்வாறான ஒரு முக்கியம் வாய்ந்த யுத்த நிறுத்தத்தை செய்திருக்கவேண்டியவர் விடுதலைப்புலிகளின் தலைவரான பிரபாகரன்தான்.

ஆனால், வேலுப்பிள்ளை பிரபாகரன் இந்த யுத்தநிறுத்தத்தையோ, அல்லது இனிமேலுள்ள பிரகடனங்களையோ செய்வதற்கு தமது மறைவிடமான புதைகுழியிலிருந்துமீண்டும் வருவாரா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

எது எவ்வாறிருப்பினும், இந்த யுத்த நிறுத்தத்துக்கான காரணம் இலங்கையரசைப் பெரும் பிரச்சினைக்குள்ளாயிருக்கிறது.

தமிழீழத்தில் சகஜ நிலையை உருவாக்குவதும், அமைதியை மேற்படுத்துவதும் யுத்த நிறுத்தத்தின் காரணங்கள் என்று கிட்டு கூறியுள்ளார்.

மக்களின் நன்மைகருதியுத்த நிறுத்தத்தை ஒரு தலைப்பட்சமாக விடுதலைப்புலிகள் செய்ததன்மூலம் சர்வதேச நல் அபிப்பிராயத்தை - ஏற்கனவே அவர்கள் இழந்துவிட்டதை - கட்டியெழுப்ப விடுதலைப்புலிகள் நினைக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல விடுதலைப் புலிகளுக்கு இலங்கை இராணுவத்தை எதிர்கொள்வதிலும் தமது படை உறுப்பினர்களை பாதுகாப்பதிலும், கிழக்கு மாகாணத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதிலும், புலி விரோத தமிழர் இயக்கங்களை ஒடுக்குவதிலும், இந்தியத் தமிழ்நாட்டில் தமதுகட்டுப்பாடற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் பலத்த முட்டுக்கட்டைகள் ஏற்பட்டுள்ளன.

இலங்கையரசு மாதத்துக்கு ஆயிரம் துருப்புகளை பயிற்றுவித்து, தேசப்பற்று என்ற, பெயரில்இனவாத'டோஸும்' கொடுத்து வடக்கு-கிழக்குக்கு அனுப்பிவைக்கிறது. பலநாடுகளிலுமிருந்து நவீன ஆயுதங்களையும் போர்விமானங்களையும் கொள்முதல் செய்து புலிகளின் கோட்டைகளை படிப்படியாக தகர்த்து வருகிறது.

புலிகள் போக்கு தமிழ்மக்களுக்கு உதவப்போவதில்லை என்ற பிரச்சாரத்தை தமிழ் மக்கள் உணரும்படியாக, நம்பும்படியாக அவர்கள் மனதில் விதைத்துவருகிறது.

தமிழ் அரசியல் வாதிகள் நிர்வாக உத்தியோகத்தர்கள் புலி விரோத தமிழ்ப்பயங்கரவாத இயக்கங்கள் என்பவர்களை தனது லாபத்துக்காய் மிகச் சாதுரியமாகவே பயன்படுத்தி வருகிறது.

வடமாகாண தமிழ் மக்களை வறுமையினதும், பஞ்சத்தினதும், பசியினதும் விளிம்புக்கு கொண்டுசெல்லும் புலிகளின் போராட்டத்திற்கு மறைமுகமாக ஒத்தாசைபுரிந்து புலிகள் மீது தமிழ் மக்களின் அதிருப்தியை வளரச்செய்வதற்கும் அரசு இடங்கொடுத்துள்ளது.

தமிழ்நாட்டிலிருந்து கள்ளக் கடத்தல்மூலம் இறக்கப்பட்ட உணவுப்பொருட்கள்,எரிபொருள்,ஆயுதங்கள் என்பவற்றை கடற்படையின் தொடர்ச்சியானரோந்துசேவைகள்மூலம் இலங்கை அரசாங்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது.

அத்தோடு,இந்தியஅரசோடு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுஇந்தியக்காவல்துறை அதிகாரிகள் மூலம் தமிழ்நாட்டுக்கரையோரங்களை விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளுக்கு எதிராக செயற்பட வைத்தது.

புலிகளின் செவிலித்தாயாரான கருணாநிதியின் தமிழ் நாட்டு அரசாங்கத்துக்கு ராஜீவ் காந்தி - ஜெயலலிதாவால் ஏற்பட்டுள்ள நெருக்கடியில் தமிழ்நாடு, சகல இலங்கைத் தமிழ்ப்பயங்கரவாதிகளுக்கும் எதிரான போக்கை எடுத்திருப்பது விடுதலைப்புலிகளின் புகலிடத்துக்கு ஏற்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தலாகும்.

மேலும் ஈராக்-அமெரிக்கா வளைகுடா நெருக்கடி விடுதலைப்புலிகளின் ஆயுதக்கடத்தல், பணவரவு என்பவற்றை எதிர்பாராதமுறையில் பாதித்துள்ளது. புலிகளின் மேற்குலக எஜமான்கள் வட-கிழக்கைவிட முக்கியம்வாய்ந்த ஒரு பெரும் மோதலில் ஈடுபட இருப்பதனால் புலிகளின் போராட்டத்தில் சிந்தை செலுத்த அவர்களுக்கு நேரம் இல்லை. இதுவும் புலிகளை ஆட்டங்காணவைத்துள்ள அரசியல் நெருக்கடியாகும்.

இன்னும் மேற்குலக தமிழீழ அனுதாபிகள் புலிகளுக்குச் வாரி வழங்கிச் சோர்ந்துபோயுள்ளார்கள். அவர்களிடம் பயமுறுத்தலின் பேரில் பணம் பறிக்க-புலிகள் எடுத்த முயற்சிகள் தமிழீழ தமிழ் அனுதாபிகளை வெறுப்படையச்செய்துள்ளன. மேலும் புலிகளின் அண்மைக்கால மனிதாபிமான மற்ற செயல்களும், காட்டுமிராண்டித்தனமான படுகொலைகளும் சித்திரவதைகளும் முஸ்லீம்விரோத பயங்கர நடவடிக்கைகளும் புலிகள்மீது அவர்களிடம் பெருங்கசப்பைத் தோற்றுவித்துள்ளன.

வட-கிழக்கில் வாழும் மக்களைகடத்திகப்பங்கேட்கவோ பணம்பறிக்கவோ இப்போது புலிகளால்முடிவதில்லை.வட-கிழக்குமக்கள் அனைத்தையும் இழந்து பஞ்சைகளாய், பராரிகளாய் தத்தம் வீடுகளிலோ, வெற்றிடங்களிலோ அகதிகளாய் மாறியுள்ளனர்.

அவர்கள் பரம ஏழைகளாகளாகவும்,பிச்சைக்காரர்களாகவும் மாறியுள்ளதில் அவர்களிடம் பறித்தெடுக்க பணமுமில்லை,பொருட்களும் கிடையாது. இந்த நிலையில் தமது ஞானசூனியங்களும், தமிழீழ வெறியில் வளர்க்கப்பட்டவர்களுமான ஆயிரக்கணக்கான குட்டிப்புலிகளுக்கு ஐந்து நட்சத்திர ஹோட்டல் சாப்பாடுகளை தொடர்ந்துபோடுவது விடுதலைபுலிகளுக்குமுடியாத காரியமாகிவிட்டது.

மேலும் கிழக்கு மாகாணத்தில் புலிகளின் புத்தியற்ற போராட்டத்தினால் காடுகளிலும்,மேடுகளிலும் அனாதைகளாக்கப்பட்டுள்ள தமிழ் அகதிகளும், மக்களும் நிம்மதியான வாழ்வை ஏங்கிப் பெருமூச்சு விடத்தொடங்கியுள்ளனர்.

இதனால் கிழக்கு மாகாணத்தைப் பிரித்தெடுப்பதற்கும், தனியான தமிழீழமாயையை கைவிடுவதற்கும் அவர்கள் தயாராகியுள்ளனர்

கிழக்கு மாகாணத்தில் தமிழ்த்தலைவர்கள் சிலர் கிழக்குப்பிரியவேண்டும் என்ற கோஷத்தைப்பகிரங்கமாகவே சொல்லித்திரியத் தொடங்கிவிட்டனர்.

கிழக்கை வடக்கோடு இணைத்த ஒரு தமிழீழக் கோரிக்கையானது கிழக்குமாகாண தமிழ் மக்கள்மீது வடமாகாண ஆதிக்கத்தமிழர் கொண்டஅன்பினால் எழுந்த ஒன்றல்ல; கிழக்கு மாகாணத்தில் இயற்கைவளம்கொழுத்த திருகோணமலை மாவட்டம், அம்பாறைமாவட்டம் என்பவற்றைத்தமதுகட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க வேண்டும் என்ற கெட்டஎண்ணம்தான் அதற்குக்காரணம் என்பதாக கிழக்குமாகாணத் தமிழ் மக்கள் இன்று, புரிந்துகொள்ளத் தொடங்கியுள்ளனர்.

இந்தப் புரிந்துணர்வை முறியடிப்பதற்காகவே விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணத்

(3ஆம் பக்கம் பார்க்க)

## .....ஆசிரியர்களுக்காக

## பாராளுமன்றத்தில்அஷ்ரஃப்

நீண்ட நாட்களாக முஸ்லிம் காங்கிரஸ், பாராளுமன்றத்திலும் மாகாணசபையிலும் விடுத்த வேண்டுகோள்கள் இப்பொழுது தொண்டர் ஆசிரியர்கள் என்ற திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். இந்த நியமனங்கள் வழங்கும்போது பின்வரும்விடயங்களை கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன். குறைந்தது ஒரு வருட சேவைக்காலத்தைத் தீர்மானிக்கும் எல்லைக் கோடாக 31-12-1989ஐக் குறித்துள்ளார்கள்.

இந்த எல்லைக்கோடு அகற்றப்படவேண்டும். தொண்டர் ஆசிரியர்களாக ஏதாவது ஒரு வருடம் சேவையாற்றினால் போதுமானது என்ற,கொள்கையை மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால், வடக்கு-கிழக்கில் அப்பொழுது நிலவிய சூழ்நிலையில் தொண்டர் ஆசிரியர்கள்செய்துள்ள தியாகம் மகத்தானதாகும்.

சென்ற நவம்பர் 1989இல் இடம்பெற்ற ரீஎன்ஏ தாக்குதலின்போதும் அதையடுத்து ஏற்பட்ட ஸ்திரமற்ற நிலையிலும் அனேக தொண்டர் ஆசிரியர்கள் பாடசாலைக்குச் செல்லவில்லை.ஏனென்றால் அதன்பின் எல்.ரீ.ரீ.இராச்சியம் ஆரம்பித்துவிட்டது.

இந்தச் சூழ்நிலையில் 31-12-1989 இல் பாடசாலையோடுதொடர்பற்ற எத்தனையோ தொண்டர் ஆசிரியர்கள் ஏற்கனவே,நான்கு,ஐந்து வருடங்களாகத்தொடர்ந்து தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியிருந்தும் அவர்களுக்குச் சந்தர்ப்பம் மறுக்கப்பட்டுள்ளதானது ஓர் அநியாயமான செயலாகும்.

தொண்டர் ஆசிரியர்கள்ஒருமுழுநேர ஆசிரியராக இருக்க வேண்டும் என்று,கூறப்படுகின்றது. ஆனால், நான்கு வருடங்கள் பகுதிநேர தொண்டர் ஆசிரியர்களாக இருந்தவர்களின் நிலைஎன்ன? அவர்களுக்குஏன் நியமனம்வழங்கப் படக்கூடாது? இதைக் கௌரவ அமைச்சரவர்கள்கவனத்தில் எடுக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங்கிரஸ்

51,வொக்ஷல் லேன்,கொழும்பு-2. தொ.பேசி:431711


## நம்பிக்கைப் பிரகடனம்!

ஆளும் ஐ. தே. கட்சியின் 36வது வருடாந்த மகாநாடு நடந்து முடிந்துவிட்டது. அதில், எதிர்க்கட்சித்தலைவர்களும் கலந்துகொண்டு கருத்து தெரிவித்ததன்மூலம் அந்த மாநாடு வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகின்றது.

இலங்கையின் வரலாற்றில், முதன்முறையாக இவ்வாறான ஒரு தேசிய மரபை,முஸ்லிம்காங்கிரஸ் தனது வருடாந்த மகாநாடொன்றில் ஏற்கனவே தொடங்கி வைத்த முன்மாதிரியை,மிகவும் அடகத்தோடுஇந்தச் சந்தர்ப்பத்தில் நினைவு கூர்ந்துகொள்கிறோம்.

அனேகமாக,எல்லாஎதிர்கட்சித்தலைவர்களுமே ஐ.தே. கட்சியின் தலைவரை ஒரு தேசியத் தலைவராக உருவகித்து உயர்த்தி, இந்த மகாநாட்டில் பாராட்டியிருக்கிறார்கள்.

''முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அவர்கள் பேசுகையில், ரணசிங்க பிரேமதாஸா அவர்களின், கலந்துரையாடலின் பின் கருத்தொருமைப்பாடு ''என்னும் கோட்பாடு, குர் ஆனினதும் பெருமானார் (ஸல்) அவர்களினதும் வழிகாட்டல்!'' என்று, குறிப்பிட்டிருக்கிறார்.

''புத்த பெருமானின் கருணை, இரக்கம் என்ற கோட்பாடுகள், ஒரு பௌத்த நாட்டில் இல்லாமற் போய்க்கொண்டிருக்கின்ற பெருங்குறையையும் இந்த மாநாடு கவலையோடு கருத்திற்கொள்ளவேண்டும்'' என்ற,முஸ்லிம்காங்கிரஸ் தலைவர் அவர்கள் ''ஒரு சிற்றெறும்பைக்கூட வதைசெய்யக்கூடாத இலங்கையர்கள்,இன்று ஒருவரையொருவர் கொலைசெய்துகொண்டிருக்கின்றோம்!'' என்றும் வருத்தப்பட்டார்.

வட-கிழக்கு பிரச்சினைபற்றிப்பேசிய,சகோதரர் அஷ்ரஃப் அவர்கள், மேற்கு ஐரோப்பிய நாடுகள், ஐரோப்பிய சமூகம் பற்றி சிந்திப்பது பற்றியும் ஒரே பாராளுமன்றம்-ஒரேசந்தை-ஒரே நாணயம் பற்றி பேசுவது பற்றியும், ஐரோப்பிய நாடுகளுக்கிடையே இருந்துவந்த எல்லைகளும் கோடுகளும் மேற்கு கிழக்கு, ஜேர்மன் நாடுகளுக்கிடையே இருந்த எல்லைகளும் இல்லாமல் மறைந்து கொண்டிருப்பதைப்பற்றியும் ஐ.தே.கட்சியினர் சிந்திக்கவேண்டிய அவசியத்தையும் சுட்டிக்காட்டி வலியுறுத்தியிருக்கிறார்.

குறிப்பாக,ஜனாதிபதி அவர்களை விழித்துப்பேசிய, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அவர்கள், ''ஐரோப்பிய நாடுகளைப் பிரித்த கோடுகளே அழிந்துபோய்க்கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில், சின்னஞ்சிறிய நாடான இலங்கையிலிருக்கும் மாகாணங்களின் எல்லைக்கோடுகளுக்கு இத்தனை முக்கியத்துவம் கொடுத்து, நாம் தொடர்ந்தும் மோதிக்கொண்டும் இரத்தம் சிந்திக்கொண்டும், உயிர்களைப்பலிகொடுத்துக் கொண்டும்...இருக்கத்தான் வேண்டுமா?'' என்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சிந்தனையைத் தூண்டும் விதத்தில் கேள்வியும் எழுப்பியிருக்கிறார்.

இந்த மாநாட்டின்மூலம் தேசிய ஐக்கியம் உணரப்பட்டிருப்பதாக, பலரும்பேசி பத்திரிகைகளும் எழுதியிருக்கின்றன.

''சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்கள் நம்பிக்கைவைக்க கூடிய ஒரே தலைவர்,ரணசிங்க பிரேமதாஸாதான்!'' என்றும் ஒரேமுகமாக புகழ்ந்து பேசியுமிருக்கிறார்கள்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வையும் நாட்டில் அமைதியையும் கொண்டுவரும் துணிவு, ஆற்றல், அரசியல் சாணக்கியம், அனைத்தும் பிரேமததாஸா அவர்களிடமே உண்டென்றும் பொதுவாகநம்பிக்கைதெரிவிக்கப்பட்டுள்ளது.

சுருக்கமாக கூறினால், வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு நிரந்தரமான - நீதியான ஒரு தீர்வுக்கு வருவதற்கு தமிழ்-முஸ்லிம் அரசியற் கட்சித்தலைவர்கள் அனைவருமே மாண்புமிகு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ அவர்களின்மீதே நம்பிக்கைப்பிரகடனம் செய்திருக்கிறார்கள்!

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின்மீது எதிர்பார்க்கப்பட்டுள்ள இந்த நம்பிக்கைப்பிரகடனத்தை, அவர் எப்படியும் நிறைவேற்றிவைக்கவேண்டுமென்று நாமும் எதிர்பார்க்கின்றோம்.

பெரும் தேசிய அழிவை ஏற்படுத்தி, நாட்டை சுடுகாடாக்கிக்கொண்டிருக்கும் வட-கிழக்கு பிரச்சினைக்கு, ஒரு நிரந்தரமான நீதியான தீர்வை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸா காணுவாராக இருந்தால்... உண்மையில், அவர் தேசியத் தலைவராக வரலாற்றில் உயர்ந்து-நிலைத்து நிற்கமுடியும்! அதேவேளை சர்வதேச அரங்கிலும் சிறப்புப்பெறவும் முடியும்!

சிறுபான்மை இனத்தின்மீது, மேலாதிக்கம் செய்ய நினைத்த, எந்தப்பெரும்பான்மையினமும் நிம்மதியாக ஆட்சிசெலுத்த முடியாது! இது இந்த யுகத்தின் பிரகடனம்!

''நமது பிரச்சினையை நாமே பேசி - பரஸ்பரம் கலந்துரையாடி நாமே தீர்வு காண்போம்'' என்பதில் ஜனாதிபதி மிகவும் உறுதியாக இருக்கிறார் போலத் தெரிகிறது!

''வட-கிழக்கு இணைப்புக்குள் தமிழ்-முஸ்லிம் அரசியற் கட்சிகள் இணைந்துபேசி, கலந்துரையாடி ஒரு தீர்வுக்கு வாருங்கள்'' என்று, அனைத்துக்கட்சிமகாநாட்டில் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார். அதைத்தொடர்ந்து, தமிழர் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் பலமாதங்களாக தொடர்ந்து,கூட்டாகவும் தனியாகவும் பலகலந்துரையாடல்களை நடத்தி வட-கிழக்கு பிரச்சினைக்கு ''இணைப்புக்குள் சமூகங்களுக்கான சபைகள்'' சபைகள் என்னும் அடிப்படையில் தீர்வு காணப்பட்டுள்ளது! ஆக்கபூர்வமான அந்தத்தீர்வுகளும்ஆலோசனைகளும் ஜனாதிபதி அவர்களினூடாக அனைத்துக்கட்சிகளின் மகாநாட்டுக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.

இனி சர்வகட்சிகளின் சதுரங்கத்தில்,ஜனாதிபதிஇன்னும் ஏதாவது காயை நகர்த்தப்போகிறாரா?அல்லது,ஆட்டத்தை முடிக்கப்போகிறாரா? சிறுபான்மைச் சமூகங்கள் அவர்மீது வைத்துள்ள நம்பிக்கை வீண்போகுமா?என்று,இருந்துதான் பார்க்க வேண்டும்!

பிறந்திருக்கும் 1991 புதிய ஆண்டிலாவது நாட்டுக்கு விமோசனம் பிறக்கட்டும்!!

மருதமுனை பள்ளிவாசல் விவகாரம்!

# அரசியல் தலையீடு இல்லை! நீதிவென்றது!

## நியமனமும் வழங்கப்பட்டது!

### அஷ்ரஃப் தொடுத்தார்! அஸ்ஹர் முடித்தார்!

''ஊர் ஜமாத்தை பிரமுகர் குழப்புகிறார் - மருதமுனை பள்ளிவாசலில் அரசியல் தலையீடு'' என்றும், இது, ஜனாதிபதியின் கட்சிச்சார்பற்ற போக்குக்குசவால்விடுக்கிறது! என்றும், ஏற்கனவே நாம் முஸ்லிம் காங்கிரஸில் செய்தி வெளியிட்டிருந்தோம்.

அதைத்தொடர்ந்து, பள்ளிவாசல் தர்மகர்த்தாக்கள் சபையிலிருந்து திட்டமிட்டு அரசியல் பழிவாங்கலுக்குள்ளாக்கப்பட்ட சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் நால்வரும் ''தமக்கு நீதி நியாயம் வழங்கப்படவேண்டும் என்று,மேல்முறையீட்டை தலைவர் அஷ்ரஃப் அவர்களினூடாக ஜனாதிபதியின் கவனத்திற்கும் முஸ்லிம் சமய கலாச்சார ராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வரின் கவனத்திற்கும் கொண்டு வந்தார்கள்.

மேற்படி கோரிக்கையை நீதி நியாயத்தின் அடிப்படையில்-அரசியற்தலையீடு எதுவுமின்றி, பரிசீலித்த முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களம்,''பதவிநியமனம் பெறாத நான்கு பேர் தொடர்பாக இறுதி முடிவு எடுக்கும் வரைக்கும் மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் நிர்வாகத்தினர்; உத்தியோகத்தர் தெரிவதற்கான கூட்டத்தை நடத்தக்கூடாது என்று,வக்பு சபை தீர்மானித்துள்ளது.'' என்று, பள்ளிவாசல் நிர்வாகத்திற்கு ஏற்கனவே அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தற்போது மருதமுனை மஜ்ஜிதுல் கபீர்பள்ளிவாசல் தர்மகர்த்தாக்கள் சபை உறுப்பினர்களாக, எம். எஸ். ஐயூப் ஜே.பி., அல்-ஹாஜ் ஈ. எல். அபூபக்கர், பொலிஸ் இன்ஸ்பெக்டர்.எச்.எல்.ஜமால்டீன், ஆங்கில ஆசிரியர் ஏ.எம். அபூபக்கர் ஆகிய நால்வரும் நியமனம் பெற்றுள்ளனர்.

பள்ளிவாசலில் அரசியல் தலையீடில்லாமல் நீதி, நியாயத்தின் அடிப்படையில் இந்த நியமனம் வழங்கப்பட்டதற்காக, இராஜாங்க அமைச்சர் அஸ்வர் ஹாஜியாருக்கு தலைவர் அஷ்ரஃப் நன்றியும் பாராட்டும் தெரிவித்தார்.

## காத்தான்குடி படுகொலை!

### ஷுஹதாக்கள் நினைவு தினம்!

காத்தான்குடி பள்ளிவாசலில்தொழுகையில் ஈடுபட்டிருந்த அப்பாவி முஸ்லிம்களை, புலிகள் கோழைத்தனமாமாக படுகொலை செய்த - நூறாவது தினம், கத்தமுல் குர்ஆன் வைபவத்தோடு சமீபத்தில் நினைவு கூரப்பட்டது.

ஷுஹதாக்கள்ஞாபகார்த்த நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்தவைபவம் ஒரு நாள் நிகழ்ச்சியாக நடைபெற்றது. அன்றைய தினத்தில், வடக்கு எல்லை வீதிக்கு, ''அஷ்ஷுஹதா'' வீதி என்று, பெயர்மாற்றம்செய்து-அதை, ஜாமியதுல் பலாஹ் உப-அதிபர், அல்ஹாஜ் எஸ். எம். அலியார் மௌலவி திறந்து வைத்தார்.

ஷுஹதாக்கள் நினைவாக ''கண்ணீரில்குளித்த காத்தான்குடி'' என்னும் கவிதை நூல் வெளியிடப்பட்டு ''தீனுக்காய் தியாகத்தீபங்கள்!'' என்னும் தலைப்பில் கவிஞர் சாந்தி முஹிதீன் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில், ரி.எல். ஜஃபர்கான், எம்.ஏ.அமீர்அலி பதியதலாவ பாரூக், கவிமணி புஹாரி,மதியன்பன்மஜீத், உட்பட பலர்கவிதைபடித்தனர்.

## அரசியல்வாதிகள்

### நிர்வாகத்திலிருக்க தடை!

பள்ளிவாசல்களிலும் ஏனைய மத வழிபாட்டிடங்களிலும் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது! அதன்தர்மகர்த்தா சபைகளில் அரசியல்வாதிகள் சம்பந்தபடாமல் சுதந்திரமாகஇயங்கவேண்டும். என்று,முஸலிம்காங்கிரஸ்நீண்டகாலமாக கூறிவந்துள்ளது.

''அரசியல்வாதிகள் இனி, ஆலய பரிபாலனங்களில் பதவிவகிக்க முடியாது.'' என்று, தடைச்சட்டம் கொண்டுவருவதற்கு அமைச்சரவை எடுத்துள்ள முடிவை வரவேற்கின்றோம். அதே வேளையில் ஆளும் அரசாங்கம் நிர்வாகத்தில் தலையிடாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுவைக்கவும் விரும்புகின்றோம்.

## இந்திய-அறபு இஸ்லாமிய இளைஞர் சம்மேளனம்

### உடன்பாட்டிற்கு வாழ்த்து!

''தமிழ் குழுக்களுடனான தங்களின் பேச்சுவார்த்தைகளின்போது,வடக்கு-கிழக்கு இணைப்பினுள், தமிழ்-முஸ்லிம்சமூகங்களுக்கான இரண்டு சபைகளை அமைப்பதற்கானஉடன்பாடு ஏற்பட்டிருப்பது குறித்து நாம் மிகவும் மகிழ்ச்சிஅடைகின்றோம்.

இலங்கையின் அமைதியை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் மேற்படி உடன்பாட்டை,குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகவும் கருதுகிறோம்!''

இவ்வாறு, இந்திய - அறபு இஸ்லாமிய சம்மேளனம்முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்கு அனுப்பியுள்ள செய்தியில்குறிப்பிட்டுள்ளது,

''தங்களின் தகுதிவாய்ந்த தலைமைத்துவத்தின் கீழ் இலங்கை முஸ்லிம் சகோதர சகோதரிகளின் வீரம் செறிந்த போராட்டத்தை நாம் மிகவும் ஆவலோடு அவதானித்துக்கெண்டிருக்கிறோம்.

முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எங்களின் மனமார்ந்த வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.''

என்று, அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அடவு நகைகள் விரைவில் கிடைக்கும்! தலைவருக்கு பிரதமர் அறிவித்தார்!

வடக்கு - கிழக்கு மாகாணத்தில், குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் அடகு வைத்த நகைகளை பெறுவதில் மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். பணத்தை செலுத்திய பின்னரும் நகைகளை மீளப்பெற முடியாமல் இடர்படுகின்றனர்.

ஏற்கனவே, அம்பாறை மாவட்ட மக்கள் பிரதிநிதி சகோ. அஷ்ரஃப் அவர்களினால் பிரதம மந்திரியும் நிதி அமைச்சருமான டி.பி. விஜயதுங்கை அவர்களின் கவனத்திற்கு இந்த விவகாரம் கொண்டுவரப்பட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் ஜூன் 11 ஆந் தேதி,மீண்டும்ஏற்பட்ட அசம்பாவிதங்களை தொடர்ந்து ஒழுங்குகள் நிறுத்தப்பட்டன.

தற்போது மீண்டும் அந்த மக்களின் நகைகளைக் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சரை வேண்டிக் கொண்டதைத் தொடர்ந்து,மேற்படி விஷயம் மக்கள் வங்கி தலைவரின் கவனத்திற்கு கொண்டு வந்திருப்பதாகவும், உடனடியாக நடவடிக்கைகளை எடுக்கும்படி கட்டளை பிறப்பித்திருப்பதாகவும், அமைச்சர் சகோ.அஷ்ரஃப்அவர்களுக்குஅறிவித்துள்ளார்.

## விடியலின் விலாசங்கள்!

-மதியன்பன் மஜீத்

அந்தஇரவின்
இரத்தவாடை
இன்னும் ... எங்கள்
சுவாசத்தோடு
சுழன்றுகொண்டிருக்கின்றது!

முஸல்லாவின்
முதுகில்
முகம் புதைத்த
மூமீன்களை
முதுகுக்குப்பின்
சுட்டுத்தள்ளியது
வீரத்தின் விளக்கமல்ல!
இயலாமையின்
இலக்கணம்!

நாங்கள்
பெயரில் மட்டுமல்ல
செயலிலும்
மிருகங்கள் தான் என்று
விளக்கம்
எழுதிவிட்டார்கள்!

இது,
மையித்து ஸீஸன்
துப்பாக்கி ரவைகளால்
முஸ்லிம்கள் தினமும்
தீக்குளிக்கிறார்கள்!

எங்களுக்கு
தினமும்
ஆறுநேரத்தொழுகை
அவசியமாகிவிட்டது!

மையித்துகள்
மலிந்து விட்டதால்
அந்த இரவு
ஒரு சகாப்தத்தை
சரித்துவிட்டது!

குர்ஆனோடு
இவர்களின் குருதிகள்
கூட்டுச் சேர்ந்தன!
குறாப்ரத்தம் பாராமல்
குருதிக்கடலை
பள்ளியினுள்
பார்க்க முடிந்தது!

ஷுஹதாக்களே!
உங்களுக்காக
இன்னும்
எத்தனை ஊர்கள்
இத்தா இருக்கின்றன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திவ்வியநாதன் தாவுவாரா? "குருநாதர்" உதவுவாரா?

56. கே: ★ டெலோ அமைப்பைச் சேர்ந்த திரு திவ்விய நாதன் எம்.பி.ஐக்கிய தேசிய கட்சியில் சேர்ந்து விடுவார் என்றும், அப்படிச் சேர்ந்தால் ஒரு அரை அமைச்சர் பதவி யாவது கிடைக்கும் என்றும்... இதற்குதூதாக சிரேஷ்ட முஸ்லிம் அமைச்சர் ஒருவர் செயற்படுகிறார் என்றும்...பேசப்படுகிறதே இதில் ஏதும் உண்மை இருக்குமா...?

சி.பி.சத்தியசீலன்,
திருக்கோவில்.

ப. நெருப்பில்லாமலும்புகையும்! ஆனால் இதில் நிச்சயமாகவே நெருப்பு இருக்கிறது! என்று நம்பலாம். அதனால் தான், டெலோ தலைமைப் பீடம், உடனடியாகவே தனது எம்.பி.பதவியை ராஜினாமா செய்யும்படி திவ்வியநாதனை கேட்டுள்ளது.

இவரின் அரசியற் குருநாதரே அந்த சிரேஷ்ட முஸ்லிம் அமைச்சர் தானாமே! இதை யாருமே சொல்லவில்லை திவ்வியநாதனே திருவாய் மலர்ந்திருக்கிறார்! எல்லாம் 'தாவும்' எண்ணம் வந்தபிறகுதான்;

தாவுவதற்குதரகராக இருக்கும் அந்த முஸ்லிம் அமைச்சர் 'கூட்டிக்கொடுத்தாவது' அல்லது, தமிழினத்தைக் காட்டிக் கொடுத்தாவது தனது அமைச்சர் பதவியை காப்பாற்ற நினைக்கிறார்!

இடையில் பாவம்பலியாகப் போவதுதிவ்வியநாதன்தான்! போதாக்குறைக்கு தமிழ் மக்களின் ஆத்மாவுக்கு எதிராக "கிழக்கை பிரிக்க வேண்டும்" என்றல்லவா பேசி வருகிறார்! கஷ்டகாலம் தொட்டால்... இப்படியெல்லாம் பேசத்தான் வருமாக்கும்!!

57. கே. ★ இன்றையஆட்சியில் தாராளமாககிடைப்பது என்ன?

எம்.எச்.அரீஸா,
தெஹிவளை.

ப: இது தெரியாதா......? தாராளமாக என்ன மிகத்தாராளமாகவே கிடைப்பது சுவீப்டிக்கட்! செவன! கெனோ!

விடிந்து முளித்தால் சுவீப்டிக்கட்! நடந்தால், தடக்கி விழுந்தால் செவன! இரவுபட்டால் கெனோ!

எங்கள் நாடு பௌத்தநாடல்லவா? அதனால்தான் இதெல்லாம்! போகிறபோக்கைபார்த்தால், ஆரும் எதையும் வைத்து சூதாடாமல் இருந்தால் அதுவே போதும்!

58. கே: ★ முஸ்லிம் காங்கிரஸ் உருவான பின்புதான் ஆளும் கட்சியிலுள்ள சில முஸ்லிம் அமைச்சர்கள் முஸ்லிம் சமூகத்துக்காக சில சலுகைகளையாவது பெற்றுக்கொடுப்பதற்கும் அதன் மூலம் தமது செல்வாக்கை உயர்த்திக் கொள்வதற்கும் பறந்து திரிகிறார்கள்! அவர்களின் கடந்தகால நடவடிக்கைகளோடு ஒப்பிடும்போது இது தெளிவாகின்றது. என்று, நினைக்கின்றேன்.ஞானியாரே தங்கள் கருத்தென்ன?

எம்.ஏ.சமூன்,
18, மீராலியா வீதி,
கொழும்பு-12.

ப: உண்மைதான். முஸ்லிம் காங்கிரஸ் வந்த பின்புதானே அவர்களின் தூக்கமே கலைந்திருக்கிறது!

என்னதான், சலுகைகளையும்; சில்லறை அபிவிருத்திகளையும் பெற்றுக்கொடுப்பதற்கு ஆலாப்பறந்தாலும் அவற்றால் முஸ்லிம் சமூகத்தின் விடுதலைத்தாகத்தை தணிக்கவே முடியாது! தனித்துவமும் பாதுகாப்பும் இல்லாமல் என்ன சலுகையும் அபிவிருத்தியும் வேண்டிக் கிடக்கிறது?

# கேள்விக்கென்னபதில்! "தர்வேஷ்ஞானி"

59. கே: ★ "உலகத்திலேயே தலைசிறந்த இனம், சிங்கள இனம்தான்" என்று, ஒரு முஸ்லிம் ராஜாங்க அமைச்சர் திருவாய் மலர்ந்திருக்கிறாரே...... இதைப்பற்றி ஞானியார் என்ன சொல்வீர்களோ......?

ஏ.எம்.கமால்டீன்,
ருவான்வெல்ல.

ப: இதில் ஆச்சர்யப்படுவதற்கு எதுவுமே இல்லை! பட்டம் பதவிகளுக்காக, அதை தொடர்ந்து காப்பாற்றவேண்டும் என்பதற்காக இப்படியும் பேசி, இதற்கு மேலும் பேசியாக வேண்டும்!

ஒரு அரை அமைச்சர் பதவிக்காக, இப்படி பேசுபவர்கள், நாளை ஒரு நேரம் "பதவிக்காக" மதம்மாறினால் கூட ஆச்சர்யப்படுவதற்கில்லை! இவர்களின் ஈமானை அல்லாஹ்தான் பலப்படுத்த வேண்டும்!

60: கே: ★ 'தினபதி' நிறுவனத்திற்கு என்ன நடந்தது? அரசு கையேற்றால் என்ன நடக்கும்?

எம். நியாஸ்,
புத்தளம்.

ப: அப்படி ஒன்றும் நடக்கவில்லை! பெரும் கொம்பனிகள் தம்மைக் காப்பாற்ற எதையும் பலிகொடுக்கும்! அரசு கையேற்றால்....அரசுக்கு இரண்டு ஊதுகோல் கிடைத்த சந்தோஷம்! வாசகர்களுக்கு சப்பென்றிருக்கும்!

## கீழக்கரையில் இஸ்லாமிய இலக்கிய மாநாடு

61. கே: கீழக்கரையில் நடைபெற இருக்கும் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஏ. சி. இப்றாஹிம்,
கல்முனை-3.

ப: எந்த இலக்கியமாக இருந்தாலும் அது, சமூகத்தை பிரதிபலிக்கவேண்டும்! வெறுமனே, பிரதிபலித்தால்மாத்திரம் போதாது! அந்தப்பிரதிபலிப்பில் இருக்கின்ற சத்தியத்தின் குரலாக - மனித ஆத்மாவின் எஞ்சினியராக அதன் படைப்பாளி இருக்கவேண்டும்! சமூக மாற்றத்திற்கு இலக்கியம் உதவ வேண்டும். வெறுமனே சமூகத்துதிபாடி அதில் அழகுகாட்டும் இலக்கியங்களால் என்ன ஆகவேண்டியிருக்கிறது? இஸ்லாமிய தமிழ் இலக்கியம், இன்னும் "சீறாப்புராணத்திலும் ராஜநாயகத்திலும் எத்தனை குற்றியலுகரம் இருக்கிறது" என்று, எண்ணிக்கொண்டிருக்கும் மரபுவாதிகளின் கைகலிருந்து விடுபடவில்லை!

முற்போக்கு கவிஞர்களும் விமர்சகர்களுமான எம்.ஏ.நுஃமானும் அப்துல் றஹ்மானும் மு.மேத்தாவும்...... போன்றவர்கள் இப்போதுதான் இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் சம்பந்தபட்டிருக்கிறார்கள்... என்று, நினைக்கிறேன்.

இவர்களைப் போன்றவர்களால், இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தின் இன்றைய போக்கை - யதார்த்தத்தை- எதிர்பார்க்கப்படும் சமூக மாற்றத்தை - கலையாக்க- விரும்பும் தவிர்க்க முடியாத இலக்கியத் தேவையை- முன்னெடுத்துச் செல்லமுடியுமா? இருந்து பார்ப்போம்.

62. கே; ★ முஸ்லிம் காங்கிரஸுக்கு தரப்பட்ட ஆயுதங்கள், கட்சியின் முக்கியஸ்தர்களால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாமே... இது கட்சியின் நலனைப்பாதிக்காதா...,

ஏ.ஜே.எம்.நிழாம்?
கொழும்பு-12.

ப: நிச்சயமாக பாதிக்கவே செய்யும்! அதனாற்தான் கட்சியின் அரசியல் அதி உயர்பீடம் உடனடியாகவே கூடி, சம்பந்தபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளைமேற்கொண்டது. அவர்கள் கட்சியிலிருந்தும் கட்சியின் நடவடிக்கைகளிருந்தும் விலக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவர்களின் இந்த நடவடிக்கைகளுக்கும் கட்சிக்கும் எந்த விதமான சம்பந்தமும் இடையாது.

முஸ்லிம் சமூகத்துக்கான பாதுகாப்பு அமானிதத்தை துஷ்பிரயோசம் செய்துவிட்டார்கள். நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் என்று, நம்பப்பட்டவர்கள்இப்படிசெய்து விட்டார்கள்! யாரை நம்புவது யாரை நம்பாமல் விடுவது? என்றே தெரியவில்லை!

இனி, சட்டம், நீதி; விசாரணை தீர்ப்பு...என்று, ஒன்று இருக்கின்றதல்லவா? அது வரைக்கும் எதிரிகளுக்கும் துரோசிகளுக்கும் கொஞ்சம் அவல் கிடைத்திருக்கிறது! அவ்வளவுதான்.

# புலிகளின்...

(1ஆம் பக்கதொடர்ச்சி)

தமிழர்கள் படுகின்ற இன்னல்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காகவே இந்த யுத்தநிறுத்தம் கொண்டுவரப்பட்டதாகவும்கதை அளந்துள்ளனர்.

கிழக்கிலுள்ள தமிழர்களுக்கென கிழக்கில் ஒரு மாகாண சபையை அமைப்பதன்மூலம் மாத்திரமே கிழக்குமாகாணத் தமிழர்களின் போராட்டத்திற்குப் பலன் அளிக்கமுடியும்

இதுகாலவரை விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களில் உயிர்துறந்தவர்களில் பெரும் பான்மையானோர் கிழக்கு மாகாணத்தைச்சேர்ந்த தமிழ் இளைஞர்கள்தான் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

அகதிகளாகவும், வேலை வாய்ப்புகளுக்கென்றும் வடமாகாண இளைஞர்கள் வெளிநாடுகளுக்கு தந்திரமாக அனுப்பப்பட்டுள்ளனர். அதேவேளை, கிழக்குமாகாணத் தமிழ் இளைஞர்கள் அர்த்தமற்ற தமிழீழப் போராட்டத்தில் பலியாக்கப் படுகின்றனர் என்று கிழக்கு மாகாண தமிழ் மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

இந்த நிலைமையை சமாளித்து கிழக்குமாகாண தமிழ் மக்களைதம்மோடுபலிக்கடாக்களாய் தொடர்ந்துவைத்திருப்பதற்கு விடுக்கப்பட்ட அறிக்கைதான் கிழக்கு மாகாண மக்களுக்கு நிவாரணம் தருவதற்காகஇந்தயுத்தநிறுத்தம் செய்யப்படுகிறது என்ற பிரகடனமாகும்.

மேலும் புலி விரோத தமிழ் இயக்கங்கள் புலிகளை வஞ்சம் தீர்க்க அரசோடு இணைந்து காட்டிக்கொடுக்கத்தொடங்கியுள்ளனர். இதனைத்தடுப்பதற்கு புலிகளால் முடியவில்லை.

புலி-விரோத தமிழ் இயக்கங்களை இவ்வாறு நெடுங்காயிற நிவிட்டால் அவர்கள் புலிகளின் பலத்தைப் பெரிதும் குறைத்து, வடகிழக்குமாகாண ஆட்சி அதிகாரத்துக்கு வந்து விடுவார்கள் என்ற பெரும் பீதியும்புலிகளைப் பீடித்து ஆட்டுகிறது.

வடமாகாணத்தில் கால நிலைகூட இராணுவ நடவடிக்கைகளுக்கு உகந்ததாகஇல்லை பதுங்கு குழிவுகள் வெள்ளத்தால் நிரம்பி வழிகின்றன. ஆயுதங்கள் போதவில்லை; உணவு பற்றாக்குறைவு மக்களிடயே மதிப்புக்குறைவு, இலங்கையரசு பலப்பட்டுள்ளது.

முன்னர்போல முஸ்லிம்கிராமங்களுக்குள் அடைக்களம் தேடி ஓடி ஒளிந்துக்கொள்ள முடியவில்லை.

காத்தான்குடி, ஏறாவூர், அக்கரைப்பற்று, சம்மாந்துறை, ஓட்டமாவடி வாழைச்சேனை மூதூர், கிண்ணியா போன்ற முஸ்லிம் கிராமங்கள் மீதும் ஏனைய முஸ்லிம்கள் மீதும் புலிகள் புரிந்த நரமாமிச படுகொலைகள் முஸ்லிம்களை புலிகளின் பரம விரோதிகளாய் மாற்றிவிட்டுள்ளன.

அரசாங்கமும், புலிகளும் யுத்த நிறுத்தத்திற்கு வந்தாலும் முஸ்லிம் கிராமங்களில் புலிகள் முன்புபோல் சேஷ்டைகள் செய்ய முடியாது என்பதை புலிகள் நன்கு உணர்ந்துள்ளனர்.

முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் தமிழ்ப்பயங்கரவாத இயக்கங்கள் அனைத்தும் ஒரே கொள்கை உடையவைதாம். அவை விடுதலைப்புலிகளாக இருந்தாலென்ன; அல்லது ஈ.பி.ஆர்.எல்.எப். ஆக இருந்தாலென்ன; எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். அதனால் முஸ்லிம்கள் எந்தத்தமிழ்க்குழுவையும் இனிமேல் நம்பமாட்டார்கள்.

ஆதலால் விடுதலைப்புலிகளுக்குதான்இன்று யுத்தநிறுத்தம் தேவைப்பட்டுள்ளது.

இந்த யுத்தநிறுத்தத்தை பாவித்து அது தன்னை மீண்டும் பலப்படுத்திக்கொள்ள அவகாசம்தேடுகிறது.இலங்கை அரசாங்கத்தை ஏமாற்றிவிடுவது அவ்வளவு பெரிய விஷயமல்ல என்று புலி நினைக்கிறது.

அரசாங்கமும் புலிகளின் இந்தப் பலஹீன நிலையை விளங்கிக்கொண்டாலும் சர்வதேச அபிப்பிராயத்துக்கு மதிப்பளித்து யுத்த நிறுத்தத்தை நிபந்தனைகளோடு ஏற்றுள்ளது.

ஆனால், நிபந்தனைகள் நடைமுறை சாத்தியமானதாயும், வட-கிழக்கில் வாழும் சகல மக்களையும் திருப்திப்படுத்தக்கூடியதாயும் இருக்க வேண்டும்.

ஆதலால் இலங்கை அரசாங்கம் யுத்தநிறுத்தத்தைத் தொடர்வதனால் தனது கட்டுப்பாட்டை நிறைவேற்றத் தவறக்கூடாது.

1. வடக்கு-கிழக்கு தொடர்பான இறுதிநிலைப்பாட்டை முன்வைக்குமாறு புலிகளைக் கோரவேண்டும்.

அந்த நிலைப்பாடு வடக்கு-கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் சிங்களவர்கள், கிழக்குமாகாணத்தமிழர்கள் பற்றிய அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகளைத் தெளிவாகக் கொண்டிருக்க வேண்டும்.

இந்த ஏற்பாடுகள் கலந்துரையாடலுக்கு பொருத்தமானவை என இலங்கை அரசு ஏற்கும் பட்சத்தில் சகல அரசியற் கட்சிகளின் மாநாட்டில் இந்த ஏற்பாடுகள் குறுகிய காலக்கெடுவுள் விவாதிக்கப்பட்டு இணக்கம் காணப்பட வேண்டும்.

இது முடியாத பட்சத்தில் இலங்கை அரசு யுத்தநிறுத்தத்தை மறுதலிக்க வேண்டும்.

இதை விடுத்து ஆயுதங்களைக் கீழே வை, பிடித்துச் சென்றோரை விடுவிஎன்றெல்லாம் கோருவது சிறுபிள்ளைத்தனமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Lanka Pen Co.
Importers of Ball Point Pens, Refills
Stationery Items &
Household Goods etc.

Phone : 24921
Telex : 21754 FAYAZ CE
Fax : 548636
Att : LANKA PEN CO
44 2nd Cross Street
Colombo-11 Sri Lanka

## வாகசர் கவனத்திற்கு!

கடந்த இதழில், 'தர்வேஷ்ஞானி' யாரின் கேள்விக்கென்னபதில்இடம்பெறாதது குறித்து ஆசிரியர்மீது "காத்திரமான தாக்குதல்கள்" மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒரு வாசகர் "முன்பக்கம் மட்டும் செய்திகளும் மற்ற மூன்று பக்கங்களும்கேள்விபதிலே இடம்பெறவேண்டும்" என்றே, கூறியிருக்கிறார்! பக்கங்களை கூட்டவேண்டும் என்றும் கடிதங்கள் வந்துள்ளன!

இன்ஷா அல்லாஹ், உங்கள் எண்ணங்களை விரைவில் பிரதிபலிப்போம்!

ஆசிரியர்-மருதூர்க்கனி

முஸ்லிம் காங்கிரஸ்

# தமிழர் அபிலாசைக்கு முரணானதீர்வை

# முஸ்லிம்களூடாக திணிக்கவேண்டம்!

## மத்திய மாாண உலமாக்கள் மாநாட்டில் தீர்மானங்கள்

நமது விஷேட நிருபர் "சாணக்கியன்"

மத்திய மாகாண உலமாக்களின் மாநாடு, சமீபத்தில், கண்டி, சேர் ராஸிக் பரீத் மண்டபத்தில் நடைபெற்றது.

"இலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கும் சவால்களை மூறியடிப்பதில் உலமாக்களின் பங்களிப்பு" என்னும்தலைப்பு மேற்படி மகாநாட்டின் கருப்பொருளாக இருந்தது.

பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

### அரசியலில்பெருமானாரின் சொல்லும் செயலும்!

உலமாக்கள், முஸ்லிம்களின் சமூக பொருளாதார நடவடிக்கைகளில் பார்வையாளர்களாக இருக்காமல், பங்காளர்களாகஇருந்து,அதே வேளையில், முஸ்லிம் சமூகம் அரசியல் ரீதியாக சரியாகவழி நடத்தப்படுவதற்கு, பெருமானார்(ஸல்) செயலில் காட்டிய தூய இஸ்லாமிய பண்புகளை இலங்கை அரசியலில் அறிமுகப்படுத்த - கூட்டாகவும் தொடர்ச்சியாகவும் உழைப்பதோடு, பௌத்த, ஹிந்து, கிறிஸ்தவ சகோதர்களோடு தொடர்ந்துந்நல்லுறவை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடவேண்டும்.

பொலிஸ் வீரர்கள்-இராணுவ வீரர்கள்,முஸ்லிம் ஊர்காவற் படையினர் உட்பட அனைவருக்கும் எங்கள் கௌரவத்தை பதிவுசெய்வதோடுஅவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் இந்த மாநாடு பிராத்திக்கின்றது.

### ஜனாதிபதிக்கு பாராட்டும்! வேண்டுகோளும்!

வட-கிழக்கில் அகதிகளாக மாற்றப்பட்டிருக்கும் லட்ச கணக்கான முஸ்லிம்களின் பாதுகாப்புக்காக உடனடி நடவடிக்கைகளை எடுத்த மாண்புமிகு, ஜனாதிபதி அவர்களுக்கும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் அவர்களுக்கும் இந்த மாநாடு நன்றி கூறுவதுடன், முஸ்லிம் அகதிகளின் குறைபாடுகளை உடனடியாகதீர்த்துவைக்கும்படியும் அவர்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளை துரிதப்படுத்தும்படியும் இந்த மாநாடு அரசாங்கத்தையும் முஸ்லிம்தலைவர்களையும் வேண்டுகின்றது.

### புலிகளுக்கு கண்டனம்! பலியானவர்களுக்கு பிரார்த்தனை!

வடகிழக்கில் குறிப்பாக, யாழ்-மன்னார் அப்பாவி முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதப்புலிகள் மேற்கொண்டுள்ள ஆள்கடத்தல், கப்பம்கேட்டு சித்திரவதைகள், கொள்ளைகள், படுகொலைகள்... பிறந்தமண்ணைவிட்டேதுரத்திய ஈனச்செயல்கள்...அனைத்தையும் கண்டிப்பதோடு,முஸ்லிம்களின் பாதுகாப்புக்காக முன்வந்து தமிழ்ப்பயங்கரவாதிகளுடன் போராடி தமது உயிர்களை இழந்த முஸ்லிம்களில் சேர்ந்து நின்று போராடுவதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொள்ளுதல்.

### மத்ரஸா கல்வித்திட்டம் மாற்றம்!

சமகால, நவீன கல்வி முறையிலிருந்து பல தசாப்தங்கள் பின்தங்கியுள்ள மத்ரஸா-கல்வித்திட்டத்தை முற்றாக மாற்றி அமைத்து,புதிய உலகத்தின் சவால்களுக்கு முகம்கொடுக்கக் கூடிய தகைமைபெற்ற உலமாக்களை உருவாக்ககூடிய புதிய மத்ரஸா கல்வித்திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

### வேறுபாடுகளுக்கு மத்தியில் ஒற்றுமை!

வேறுபாடுகளுக்கு மத்தியில் ஒற்றுமை" எனும் கோசத்தை முன்னெடுத்துச் செல்வதோடு,முஸ்லிம் சமூகத்தின் மத்தியிலிருக்கும் இஸ்லாமிய அடிப்படைக்கு முரண்படாத வேறுபாடுகளுக்கு பதிப்பளித்து,அவற்றை கௌரவப்படுத்தும் அதேவேளை, முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையை பலப்படுத்துவதற்காக - அத்தகைய முக்கியத்துவமற்ற அம்சங்களிருந்து சமூகத்தின் கவனத்தை திருப்புவதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொள்வதோடு இதன் மூலம், முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான பொதுவான அம்சங்க

### நிர்வாகத்தில் தலையீடு வேண்டாம்!கத்தீப்மாருக்கு சம்பளத் திட்டம்!

பள்ளிவாசல்களின் நிர்வாகத்தில் அரசியல் தலையீடு இல்லாமல் செய்வதோடு பள்ளிவாசல்களில் கடமை புரியும் கதீப்மார், மோதீன்கள் சிற்றூழியர் அனைவருக்கும் சம்பள விடுமுறை நிர்ணய சபை நியமித்து அவர்களுக்கும் ஒய்வூதிய வசதிகளும் அமைத்துக்கொடுக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்கத்திற்கும் முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கும் இந்த மாநாடு கோரிக்கை விடுக்கின்றது.

### இனப்பிரச்சினைக்கு தீர்வு!

இன்று இந்த நாட்டில் புற்றுநோயாக மாறியுள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வு தமிழ்-முஸ்லிம்-சிங்களசமூகங்களுக்கு உடன்பாடானதாக இருக்கவேண்டும்.

தமிழர்களின் அபிலாசைகளுக்கு முரணான தீர்வுகளை முஸ்லிம்களினூடாக திணிக்க முயலும் பேரினவாத சக்திகளின் முயற்சிகளை இந்த மாநாடுமிக வன்மையாக கண்டிப்பதுடன், பேரினவாதசக்திகளின் கைக்கூலிகள், முஸ்லிம் சமூகத்தின் கோடரிக்காம்புகளாக - துரோகிகளாக மாறி முஸ்லிம் சமூகத்தை காட்டிக் கொடுக்காமல் இருக்குமாறும் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்களத்தனிக்காமல் இருக்குமாறும் சம்பந்தபட்டவர்களை இந்த மாநாடு வேண்டிக் கொள்கிறது.

### தமிழர்முஸ்லிம்கட்சிகளின் தீர்வுக்கு ஆதரவு!

மேன்மை தங்கிய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸா அனர்களின் தலைமையில். நடைபெறும் அனைத்து கட்சிகளின் மாநாட்டு முயற்சிகள் வெற்றிபெற இம்மகாநாடு பிரார்த்திக்கின்றது!

ஜனாதிபதி அவர்களின் பணிப்பின்பேரில், கருத்தொருமைப்பாட்டுக்கு வந்துள்ள தமிழ்-முஸ்லிம்கட்சிகள்,இனப்பிரச்சினைக்கு தீர்வாக முன்வைத்திருக்கும் ஆலோசனைகளுக்கும் அவர்கள் மேற்கொண்டிருக்கும் சகல முயற்சிகளுக்கும் இந்த மாநாடு தனது முழு ஆதரவையும் தெரிவிக்கின்றது.

### மாவட்டங்கள்தோறும் கருத்தரங்குகள்.

மாவட்டரீதியில் உலமாக்களுக்குதலைமைத்துவ பயிற்சி அளிப்பதுடன் மாவட்டங்கள் தோறும் கருத்தரங்குகள் நடத்தி, உலமாக்கள் மத்தியிலும் சமூகத்திற்கு மத்தியிலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்றும், முஸ்லிம் அரசியல்வாதிகள், இஸ்லாத்திற்கு எதிராகவும் சமூகத்திற்கு எதிராகவும்மேற்கொள்கின்ற நடவடிக்கைகளுக்கு எதிராக உலமாக்கள் ஒன்று திரண்டு செயற்படவேண்டும்! என்றும் இந்த மாநாடு தீர்மானிக்கின்றது.

இந்த மகாநாட்டில் பிரதம அதிதியாகிய, உலகளாவிய இஸ்லாமிய அழைப்பு நிலையத்தின் இலங்கைப் பிரதிநிதி சகோதரர் அஷ்ஷெகு, முப்தாஹ் அவர்களும்,சிறப்பு அதிதியாக உலகளாவியவெகுஜன தலைமைத்துவத்தின் ஆசிய நாடுகளின் செயலாளர் நாயகம் சகோதரர், எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களும் கலந்து கொண்டு இறப்புரை வழங்கினர்.

## முஸ்லிம்சமூகம் துரோகிகளை மன்னிக்காது! அனைத்துக் கட்சி மாநாட்டுக்கு ஆதரவு! இணைப்புக்குள் தமிழ்-முஸ்லிம்சமூகங்களுக்கான சபைகளுக்கு ஆதரவு!

## இலங்கையில் 'ராபிதா'வுக்கு இருட்டடிப்பு!

சமீபத்தில் மக்காமாநகரில், "ராபிததுல் ஆலமுல் இஸ்லாமி" ஈராக்-குவைத் சம்பந்தமாக ஆராய்வதற்காக ஒரு மகாநாட்டை ஏற்பாடு செய்திருந்தது. அதற்கு இலங்கையில் இருந்தும் சில பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

முஸ்லிம் காங்கிரஸ் வெளியுறவுகளின் பணிப்பாளரும் அரசியல் அதி உயர்பீட உறுப்பினருமான அஷ் ஷேய் இனாமுல்லாஹ் அவர்களும் அழைக்கப்பட்டிருந்ததாக உத்தியோகப்பற்றற்ற முறையில் தெரியவந்துள்ளது.

சகோ இனாமுல்லாஹ்வுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த அந்த அழைப்பிதழும் விமானடிக்கட்டுகளும் இலங்கையில் திட்டவட்டமாகவே கிடைத்திருந்தாகவும் ஆனால், அது வேண்டுமென்றே திட்டமிடப்பட்டு இருட்டடிப்புச் செய்யப்பட்டதாவும் இப்போது, தெரிய வந்துள்ளது!

இந்த கைங்கரியத்தை இலங்கையின் 'ராபிதா' பிரதிநிதிகள் என்று, தம்மை அடையாளம் காட்டிக்கொண்டிருக்கும் மூத்த முஸ்லிம் தலைவர்களைத் தவிர வேறுயார் செய்திருக்க முடியும்?என்று, விஷயமறிந்த வட்டாரங்களிலிருந்து எழும் வினாவுக்கு என்ன பதில் சொல்லுவார்களோ இந்த இருட்டிப்பை திட்டமிட்டு செய்ததற்கு காரணம்; அவர்களின் கடந்தகால வண்டவாளங்கள் தண்டவாளத்திலும் ஆகாயத்திலும் பறக்கும் என்பதாலா?

## சம்மாந்துறை அல்-மர்ஜான் மகளிர் மஹா வித்தியாலயம்

சம்மாந்துறை மக்களின் மிக நீண்டகால, "மகளிர் மகா வித்தியாலய" கோரிக்கை நிறைவேற்றப்பட்டது. மேற்படி கோரிக்கையை சம்மாந்துறை "மஜ்ஜிலிஸேஷுறா" குழுவினர், திகாமடுல்ல மக்கள் பிரதிநிதி சகோ அஷ்ரஃப் அவர்களினூடாக மாண்புமிகு கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி அவர்களுக்கு விடுத்திருந்தனர். அதை ஏற்றுக்கொண்ட அமைச்சர் அவர்கள் சம்மாந்துறை அல்மர்ஜான் மஹா வித்தியாலயத்தை அல்மர்ஜான் மகளிர் மஹா வித்தியாலயமாக மாற்றி பிரகடனம் செய்தார். அதற்கான கட்டளைகள் மாவட்ட கல்விப்பணிப்பாளருக்கும் பிறப்பிக்கப்பட்டது.

சமீபத்தில் சம்மாந்துறைக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்த ஜனாப் அஷ்ரஃப் அவர்கள் "அல்மர்ஜான் மகளிர் மஹா வித்தியாலய" பெயர்ப்பலகையை உத்தியகபூர்வமாக திரை நீக்கம் செய்ததோடு, கோலாகலமான வைபத்திலும் கலந்து கொண்டார்.



கொழும்பு - 2, இல: 51, வொக்ஷல்லேனிலுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸால் அதன் அச்சுச்சாதனங்களுடன் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org